## கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தேனி

வழக்கு எண் OS. No.7/2016 நாள்: 03.01.2026

**<u>28ம் பிரதிவாதி தரப்பில் மட்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வா.சா.1 –மாதவன் த/பெ.சங்கரலிங்கம் முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

(வா.சா.1– மாதவன் முன்னிலையானார். Grade I Bench Clerk திருமதி. சுபத்ரா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்)

**<u>28ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 28ம் பிரதிவாதி தரப்பில் மட்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

என்னுடைய தாயார் யசோதயை பெற்ற தந்தை சங்கரலிங்கக் கவுண்டர் அவர்களின் தந்தை பெயர் ஆவுலிய கவுண்டர் ஆவார். எனக்கு ஆவுலிய கவுண்டர் என்பவரின் முதல் எழுத்துக்கும், நாகப்ப கவுண்டர் மகன் சங்கரலிங்கம் என்பவரின் முதல் எழுத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது வழக்குரையில் சங்கரலிங்கம் என்ற பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி 15ம் பிரதிவாதி பட்டா பெயர் மாறுதல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு ஆ.சங்கரலிங்கம் என்ற பெயரில் பட்டா எதுவும் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி ஆ.சங்கரலிங்கம் பெயரில் 15ம் பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளது சரியா தவறா என்றால் சரி. ஆ.சங்கரலிங்கம் பெயரில் பட்டா எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு 1981ம் ஆண்டு நில மேம்பாட்டு திட்டத்தின்படி யாருடைய பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் எனது

தந்தை N.சங்கரலிங்கம் என்ற பெயரில் இருந்ததை A.சங்கரலிங்க கவுண்டர் என்று மாற்றியுள்ளார்கள். 1981ம் ஆண்டு நில மேம்பாட்டு திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள அ பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, அதற்கு முன்புள்ள அ பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேன். 1981ம் ஆண்டு நில மேம்பாட்டு திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள அ பதிவேட்டை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் அ பதிவேடு என்பது 1981ம் ஆண்டு நில மேம்பாட்டு திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள அ பதிவேடு என்றால் சரிதான், அது **பி.வா.சா.ஆ.1**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண்.393/3 என்பது பட்டா எண்.10–ல் ச.அழகர்சாமி என்ற பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண்.393/6 என்பது பட்டா எண்.379–ல் எனது அப்பா ந.சங்கரலிங்கம் பெயரில் தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண்.393/3 என்பது பட்டா எண்.10–ல் ச.அழகர்சாமி என்பவர் 15ம் பிரதிவாதியின் தந்தை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண்.393/3–க்கு ந.சங்கரலிங்கம் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண்.393/3–க்கு கிழக்குப் பக்கம் உள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 394 ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி சர்வே எண்.393/3–க்கு கிழக்குப் பக்கம் உள்ள சொத்தின் சர்வே எண்.394 –க்கு பாத்தியமான கிணறு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண்.394–ல் உள்ளது. சர்வே எண்.394–ல் இரட்டைக் கிணறு ஒன்றும், மற்றும் ஒரு கிணறும் உள்ளது. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின் பக்கம் 3–ல் சர்வே

எண்.394/1–ல் உள்ள கிணற்றில் சர்வே எண்.393/3 நிலத்திற்கு தண்ணீர் பாத்தியம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆவணத்தை படித்து பார்த்தப்பின்னரும் சாட்சி தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.393/3 நிலம் ஏக்கர் 1 செண்ட் 94க்கு ஏற்பட்ட 2/9 பாகம் நீங்கலாக மீதமுள்ள 7/9 பாகத்தில் பிரிவினையில்லாத பேர்பாதி பாகப்பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.394/1–ல் உள்ள எனது பாக நிலத்திற்கு சர்வே எண்.393/7–ல் உள்ள கிணற்றிலும் சர்வே எண்.393/3 நிலத்திற்கு ஏற்பட்ட 2/9 பாகம் நீங்கலாக என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகளை படித்துப் பார்த்தும், படித்துக் காண்பித்தும், விளக்கியும் சாட்சி புரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். நான் அளிக்கும் மேற்படி சாட்சியம் நீதிமன்றத்தை ஏமாற்றும் தீய உள்நோக்கத்தோடு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் III–ஐ என்ற பத்தியில் 2/9 என்ற விகிதாச்சாரம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2/9 என்ற விகிதாச்சாரம் என்ன காரணத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.393/3 ல் உள்ள 1 ஏக்கர் 94 செண்ட் நிலத்தில் 2 பாகம் நீங்கலாக மீதமுள்ள நிலத்திற்கு பேர்பாதி பிரிவினையில்லாத பாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளது, 2 பாகம் என்பது பொதுக்கடனிற்காக உள்ளது. 2/9 பாகம் பொதுக்கடனிற்காக ஏற்படுத்தப்பட்டதாகக் கூறும்பட்சம் 7/9 பாகம் வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி பிரிவினை செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1–ல் சர்வே எண்.393/3–ல் 1 ஏக்கர் 94 செண்ட் நிலத்தில் 2/9 பாகம் கடனிற்காக ஒதுக்கப்பட்டது என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

வா.சா.ஆ.2 –ல் 2/9 பாகம் எதற்காக என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1–ல் சர்வே எண்.393/7, 394/1–ல் உள்ள கிணற்று உரிமையினை பொறுத்து கூறப்பட்டுள்ளதை தவறாக புரிந்துக்கொண்டு வா.சா.ஆ.2 அறிவிப்பும், வழக்குரையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் அழகர்சாமியோ, பாக்கியமோ தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ன் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் எதிரி பக்கம் போய்விட்டதால் எங்களால் தாக்கல் செய்ய இயலாது. எனது வழக்குரையில் வா.சா.ஆ.1–ல் அழகர்சாமி என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ன் அசல் யாரிடம் சென்றுவிட்டது என்றால் எதிர்வாதி மணிகண்டன் வசம் உள்ளது. மேற்படி மணிகண்டன் இந்த வழக்கில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டுள்ளார். வா.சா.ஆ.1–ன் அசல் ஆவணத்தை நான் வைத்துக்கொண்டே இந்நீதிமன்றத்தில் வேண்டுமென்றே தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அசல் ஆவணத்தை தாக்கல் செய்தால் 15ம் பிரதிவாதியின் தந்தை அழகர்சாமியின் கையொப்பம் விபரங்கள் தெரியவரும் என்பதால் தான் நான் அந்த ஆவணத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ல் எனது தந்தையின் பாகமான பி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 15 லக்க சொத்துக்களும் எனது தந்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் ஒரு சொத்தை தவிர மற்ற சொத்துக்களை எனது தந்தை விற்பனை செய்துவிட்டார். எனது தந்தை விற்பனை செய்த சொத்துக்களை பொறுத்து நான் தற்போதுவரை எந்தவிதமான

ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை குடிபோதையிலும், கூத்தியாலும், முறையற்ற வாழ்க்கை நடத்திவந்து, சொத்துக்களை எல்லாம் விற்பனை செய்துவிட்டார் என்று எனது வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை குடும்ப நன்மைக்காக சொத்துக்களை விற்பனை செய்யவில்லை என்றும், கெட்ட சகவாசத்தின்பேரில் சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் எனது அப்பாவின் செய்கைகளை நான் ஆட்சேபிக்காததால் எனது அப்பாவின் செயல்களை நான் அங்கீகரித்துக் கொள்கிறேன் என்றால் நான் அந்த சமயத்தில் மைனராக இருந்ததால் ஆட்சேபனை செய்யவில்லை. நான் மேஜரான பின்பு எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 2007ம் ஆண்டு இறந்தார், நான் மேஜராகி 13 வருடங்கள் கழித்து எனது தந்தை இறந்துபோனார். நான் மேஜரான பின்பு எனது தந்தை உயிருடன் இருந்த காலத்தில் எனது தந்தை விற்பனை செய்த சொத்துக்களை பொறுத்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் நான் முயற்சி எடுத்தேன், ஆனால் கிரையம் என்று சொல்லிவிட்டதால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. 15ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஒரு பகுதியை மற்ற எதிர்வாதிகளுக்கு விற்பனை செய்த சில ஆவணங்களில் அந்த ஆவண விபரங்கள் அறிந்தும், தெரிந்தும் என்னுடைய தந்தை சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல, மேலும் அந்த விபரத்தை முறியடிக்கும் நோக்கத்தோடு, எனது தந்தையின் மீது அபாண்டமான குற்றச்சாட்டை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் தற்போது வீடுகளாக உள்ளன என்றால் 2013ம் வருடம் முதல் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. தாவா சொத்தில் 08.06.1995ம் தேதி 16ம் பிரதிவாதியாலும் 03.07.1995ம் தேதி 17ம் பிரதிவாதியாலும்,

26.08.1996ம் தேதி 19ம் பிரதிவாதியாலும், 21.05.1997ம் தேதி 21ம் பிரதிவாதியாலும், 15ம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 28ம் பிரதிவாதியால் 03.05.2007, 04.12.2012, 13.02.2014, 13.02.2014 ஆகிய தேதிகளில் 15ம் பிரதிவாதியிடமிருந்து கிரையங்கள் பெறப்பட்டுள்ளன என்றால் சரிதான். அதே போன்று மற்ற பிரதிவாதிகளும் 2002ம் ஆண்டுக்கு முன்பே கிரையங்கள் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி கிரையங்கள் அடிப்படையில் அந்த சமயத்திலேயே தாவா சொத்துக்களில் வீடுகள் கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் 2013ம் ஆண்டு முதல் தான் வீடுகள் கட்ட ஆரம்பித்தார்கள். மேற்படி கட்டிய வீடுகளுக்கு மேலசொக்கநாதபுரம் பேரூராட்சியில் வீட்டுவரி இரசீதுகள் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது வழக்குரையில் தாவா சொத்துக்கள் அனைத்தும் விவசாய நிலம் என்று காட்டியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் மேலச்சொக்கநாதபுரம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட வீதியை தவிர மற்ற பகுதிகள் முழுவதும் வீடுகளாக உள்ளன என்றால் சரியல்ல, காலியிடம் உள்ளது. 28ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்து விவசாய நிலம் அல்ல, அவற்றில் கட்டிடங்கள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து பார்வையிட்டாலே உண்மை நிலவரம் தெரியவரும் என்று எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தை பார்வையிடுவதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் எனது வழக்கறிஞரை கேட்டுத்தான் சொல்ல முடியும். நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தை பார்வையிட்டாலே நான்

பிராதில் சொல்லியுள்ள சொத்துவிபரம் தவறு என்று தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1385ம் பசலிக்கு முன்பே 15ம் பிரதிவாதியினுடைய பாட்டி பாக்கியம் என்பவர் பாகத்திற்கு கொடுக்கப்பட்டு, அவரது மகனான அழகர்சாமி என்பவருக்கு அந்த சொத்து கிடைக்கப்பெற்று அவர் பெயரில் சிட்டா ஏற்பட்டுள்ளது என்றால் இல்லை. Jamin Estate Act பற்றி எனக்கு தெரியாது. நிலவுடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பே தாவா சொத்து பாக்கியத்தின் பாகமாக கொடுக்கப்பட்டு, அவரால் அவரது மகன் அழகர்சாமிக்கு கொடுக்கப்பட்டு, அதனடிப்படையில் நிலவுடைமை மேம்பாட்டு திட்ட அ பதிவேட்டில் ச.அழகர்சாமி பெயரில் பட்டா எண்.10 என பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் வா.சா.ஆ.1–ல் தாவா சொத்து பாகப்பிரிவினைக்கு உட்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1–ன் அடிப்படையிலேயே பி அட்டவணை 1 லக்க சொத்தின் மேற்கு மாலாக சர்வே எண்.393/3–யை அழகர்சாமி நிலம் என நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 என்பது ஈடு ஆவணமாகும். அந்த ஈடு பத்திரத்தை திருப்பியதற்கான இரசீது தான் வா.சா.ஆ.11 ஆகும் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 எழுதும்போது வா.சா.ஆ.7ன் அசல் ஆவணத்தை திருப்பி வாங்கினேனா என்றால் இல்லை, அது தொலைந்துவிட்டதாக சொன்னார். வா.சா.ஆ.7ன் அசல் ஆவணம் தொலைந்துப்போனது என்ற விபரத்தை எனது வழக்குரையிலோ, ஆவணப்பட்டியலிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.7–ல் 15ம் பிரதிவாதியின் தந்தை அழகசர்சாமி ஓர் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்று எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. அழகர்சாமி ஒத்தி

வைக்கவில்லை என்றால் சரிதான், ந.சங்கரலிங்கம், மணிகண்டன், தொட்டப்பன் ஆகியோர் ஒத்தி வைத்தனர். வா.சா.ஆ.8 என்பது நானாக உருவாக்கிக்கொண்ட மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ல் குறிப்பிடப்பட்டுள்ள தலைமை ஆசிரியரால் அந்த ஆவணம் வழங்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல, எனது தாயார் நேரடியாக சென்று தலைமை ஆசியரிடம் பெற்றார். 1957 ம் வருடம் தொட்டப்பக் கவுண்டரின் இறப்பு பதிவேடுகளில் காணப்படவில்லை என்ற விபரம் தான் வா.சா.ஆ.9–ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1957 ம் வருடம் இறந்த தொட்டப்பக் கவுண்டரின் இறப்பு பதியப்படவில்லை என்பதற்கான ஆவணம் தானே தவிர, அவரது இறப்பே ஏற்படவில்லை என்பதற்கான ஆவணம் இல்லை என்றாலும், அவர் 1957 ம் வருடம் தான் காலமானார் என்றால் சரியல்ல, 1935 ம் வருடத்தில் இறந்துப்போனதாக எனது தாயாரும், ஊரில் உள்ள மக்களும் சொன்னார்கள். வா.சா.ஆ.9 ன்படி சர்வே எண்.393/3 நிலத்தின் பட்டா எண்.10–ல் சங்கரலிங்க கவுண்டர் மகன் அழகர்சாமி என்பவருடைய பெயரில் இருந்து தான் மற்றவர்களின் பெயர்களுக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதனடிப்படையில் தான் சர்வே எண்.393/3 என்பது பல உட்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றால் சரிதான், 1990 ம் ஆண்டு உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளன, N.சங்கரலிங்கம் என்ற பெயரை சங்கரலிங்க கவுண்டர் என்று என்னை கேட்காமலேயே மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் எனக்கோ, எனது தந்தைக்கோ எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லாத நிலையில் என்னை கேட்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையில் சட்டப்பூர்வமாக ஏற்படுத்தப்பட்ட உட்பிரிவுகளை பொறுத்து

வருவாய் துறை அதிகாரிகள் கையூட்டுப் பெற்றுக்கொண்டு உட்பிரிவுகள் ஏற்படுத்திக்கொண்டனர் என்று வழக்குரையிலும், வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளது முற்றிலும் தவறு என்றால் சரியல்ல, கையூட்டுப் பெற்றுக்கொண்டுதான் அவ்வாறு நடைபெற்றுள்ளது. நான் தாக்கல் செய்த குற்ற வழக்கில் எதிர்வாதிகளால் கூறப்படும் கிரைய ஆவணத்தில் கண்டுள்ள எனது தந்தையின் கையொப்பம் அவருடைய கையொப்பம் அல்ல என தடயவியல் நிபுணர் குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்பட்டுள்ளதில் அந்த தடயவியல் நிபுணரின் அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோன்று தடயவியல் நிபுணரின் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தினை பொறுத்து எதிர்வாதியால் நல்ல எண்ணத்தின் பேரில் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறுதலாக பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக கோட்டாட்சியரிடமோ, மாவட்ட வருவாய் அலுவலரிடமோ மேல்முறையீடு செய்தேனா என்றால் செய்தேன், அவர்கள் சிவில் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். அவ்வாறு நான் தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவின் நகலோ, அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் நகலோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த மேல்முறையீட்டு மனு விபரங்கள் தாக்கல் செய்தால் இந்த வழக்கின் கூறியுள்ள விபரங்கள் தவறு என்று தெரிந்துவிடும் என்பதால் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது புகாரின் அடிப்படையில் பிரதிவாதிகள் மீது நில அபகரிப்பு பிரிவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தற்போது விசாரணையில் உள்ளதா என்றால்

நிலுவையில் உள்ளது. வா.சா.ஆ.14 ன்படி சர்வே எண்.393/3 சி—ல் உள்ள 91 செண்ட் நிலம் தான் எனக்கும், எனது தந்தைக்கும் பாகமாக கிடைத்த நிலம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த குற்ற வழக்கில் நான் குறிப்பிட்டுள்ள தொட்டப்பக் கவுண்டரின் வாரிசுகள் தொட்டப்பன், மணிகண்டன், சுரேந்திரன் ஆகியோர் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி புகாரில் வா.சா.ஆ.14 ன்படி சர்வே எண்.393/3 சி—ல் உள்ள 91 செண்ட் நிலம் மட்டும் தான் எனக்கு பாத்தியம் என்று தெளிவாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 பக்கம் 4—ல் 21.02.2000 ம் தேதி 8192 சதுர அடியை சாலைகளுக்காக எங்கள் பேரூராட்சி நிர்வாகத்திற்கு ஆவண எண்.585/2000—ன் பிரகாரம் தானமாக கொடுத்ததாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 2000—ல் பேரூராட்சிக்கு தானமாக எழுதிக்கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் அது சமயமே பேரூராட்சியால் சாலை போடப்பட்டதா என்றால் 15 ம் பிரதிவாதியால் தானமாக கொடுக்கப்பட்ட பின்பு, 2013 ம் ஆண்டுக்கு பின்னர் தான் போடப்பட்டது. பிரதிவாதிகளின் கிரைய பத்திரங்கள் விபரம், அதில் அவர்கள் வீடு கட்டிய விபரங்கள் குறித்து எனக்கு எப்போது தெரியவந்தது என்று குறிப்பிட்டு எனது வழக்குரையிலோ, வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் அறியவே பிரதிவாதிகளால் தாவா சொத்து கிரையங்கள் பெறப்பட்டு, அதில் வீடுகள் கட்டி, பல ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனடிப்படையிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கினை பொறுத்து நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டண விபரமும் தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தின்

அருகாமையில் வசித்து வரும் நபர்களுக்கும், எனக்கும் தற்போது சுமூகமான உறவு இருந்தவருகிறது என்றால் இல்லை. தாவா சொத்தில் கிரையம் பெற்ற பிரதிவாதிகளில் பலர் வீடு கட்டுவதற்கு நானே அளவுகள் ஏற்படுத்தியும், அவர்களின் கட்டுமானத்திற்கும் உறுதுணையாக இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொல்லியுள்ள சொத்து விபரம் தவறானது என்றால் சரியல்ல. சொத்து விபரங்களில் கட்டிட விபரங்களை வேண்டுமென்றே மறைத்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ளவாறு தாவா பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல, நான் நல்ல எண்ணத்துடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து பாகப்பிரிவினைக்கு உட்பட்டதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து 15ம் பிரதிவாதிக்கு வாரிசுப்படி பாத்தியப்பட்டு, அவரால் ஏற்படுத்தப்பட்ட கிரையங்களும் சட்டப்பூர்வமானது என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் பிரதிவாதிகளின் கிரைய ஆவணங்கள் செல்லத்தக்கத்தல்ல என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். அதனடிப்படையிலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>10, 15 முதல் 19, 22 முதல் 24, 26, 30, 33, 34 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

10, 15 முதல் 19, 22 முதல் 24, 26, 30, 33, 34 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.01.03 16:15:18 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (FAC),**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**தேனி.**